# குயிக் ஹீல் அறக்கட்டளை

# எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு நடமாடும் கிளினிக்கை நன்கொடையாக அளிக்கிறது

**சென்னை, செப்.24-**

குயிக் ஹீல் டெக்னாலஜிஸ் லிமிடெட் சிஎஸ்ஆர் பிரிவான குயிக் ஹீல் அறக்கட்டளை, சென்னை, காட்டான் குளத்தூர், எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு ஆரோக்கியா யான் வடிவில் தாராள நன்கொடையை அளித்துள்ளது. ஆரோக்யா யான் ஒரு அதிநவீன நடமாடும் மருத்துவ கிளினிக் ஆகும், தொலைதூர மண்டலங்களில் உள்ள நோயாளிகளுக்கு இவ்வசதியைக் கொண்டு செல்ல இது வடிவமைக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் நோயறிதல், சிகிச்சைகள், வழக்கமான பரிசோதனைகள் போன்ற சுகாதாரச் சேவைகளையும் வழங்குகிறது.

இந்த அறக்கட்டளை இந்தியாவின் மிகப்பெரிய தன்னார் வத் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான புதிய தலை முறை அறக்கட்டளையுடன் இணைந்து கிராமப்புறங்களில் தேவைப்படுபவர்களுக்கு மற்றும் தரமான மருத்துவச் சேவை கிடைக்காதவர்களுக்கு, கண் பரிசோதனை, பல் பராமரிப்பு, இதயநோய், தோல் நோய்கள், எலும்பு பராமரிப்பு, புற்றுநோய்த் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு போன்ற மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்கிறது.

இந்த முயற்சியின் மூலம், ஆரோக்கியா யான் ஒவ்வொரு ஆண்டும் அருகிலுள்ள கிராமங்களான செட்டிபுண்ணியம், வில்லியம்பாக்கம், சாஸ்திரிப்பாக்கம், மேட்டுத்தெரு, வீராபுரம் போன்ற பகுதிகளில் 60,000-க்கும் மேற்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண் டுள்ளது. ஆரோக்கியா யான் 2021 ஜனவரியில் தொடங்கப் பட்டது, இந்தியாவின் கிராமப்புற இதயப்பகுதியில் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துவதற்கான குயிக் ஹீலின் பெரிய சிஎஸ்ஆர் தொலைநோக்கின் ஒரு பகுதியாகும். இது அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்குவதன் மூலம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவர்களு க்கு ஒரு பெரிய மருத்துவ ஆதரவு அமைப்பாக செயல்படும்.